මුද්දර නිවේදන අංක
முத்திரைச் செய்தித்தாள் இல. } 37

# බණ්ඩාරනායක අනුස්මරණ ජාත්‍යන්තර සම්මන්ත්‍රණ ශාලාව විවෘත කිරීම

பண்டாரநாயக்க நினைவு சர்வதேச மாநாட்டு மண்டபத்தினை திறத்தல்

## සමරු නිකුත් කිරීම

## ஞாபகார்த்த வெளியீடு

1973.05.17

තැ. සහ වි. සං. දෙපාර්තමේන්තුවේ මුද්දර කාර්යාංශයේ ප්‍රකාශනයකි

அஞ்சல் தொ. தொ. திணைக்களத்தின் முத்திரைப் பணியகத்தால் பிரசுரிக்கப்பட்டது.

මුද්දර නිවේදන අංක 37

තැපැල් සහ විදුලි සංදේශ අමාත්‍යාංශය,

1973 මැයි මස 12 වැනි දින.

බණ්ඩාරනායක අනුස්මරණ ජාත්‍යන්තර සම්මන්ත්‍රණ ශාලාව විවෘත කිරීම සැමරීම් වස්, 1973 මැයි මස 17 වැනි දින තැපැල් හා විදුලි සංදේශ අමාත්‍යාංශය විසින් මුද්දරයක් නිකුත් කරනු ලැබේ. අග්නිදිග ආසියාවේ ඉතාමත් දර්ශණීය හා විශිෂ්ඨ ගොඩනැගිලි වලින් එකක් වන මෙම ජාත්‍යන්තර සම්මන්ත්‍රණ ශාලාව වූ කලී දිවංගත අගමැති එස්. ඩබ්ලිව්. ආර්. ඩී. බණ්ඩාරනායක මැතිතුමාගේ ශ්‍රී නාමයට උපහාරයක් වශයෙන් වූ මහජන චීන රජයේ තිළිණයකි. එතුමා ජීවත් වූ හා දිවි පිදූ පරමාර්ථ මෙම ශාලාවෙන් සංකේතවත් වේ. සිය වෙනස්කම් කුමක් හෝ වේවා මිනිසා එක්සත්ව ජීවත් විය යුතුය, යන එතුමාගේ විශ්වාසය එතුමාගේ සෑම ක්‍රියාවකදීම එතුමා මතුකර දක්වීය. 1957 වර්ෂයේදී එක්සත් ජාතීන්ගේ සංගමයේ ලංකා ශාඛාව අමතමින් එතුමා විසින් කරන ලද දේශණයෙහි ඔවුන් අතර මතවාදී වෙනස්කම් ඇතිවුවද එකඟවිය නොහැකි තත්ත්වයක් ඇති වුවද, එකිනෙකා අතර සුහද සම්බන්ධතාවයන් ආරක්ෂා කර ගත යුතු බව හා එකිනෙකා අවබෝධ කරගෙන සැළකිලි දක්විය යුතුය යන්න සඳහන් විය.

1954 වර්ෂයේ දී ඉන්දුනීසියාවේ බැංඩුංහි දී සැකැසුණු සහජීවන ප්‍රතිපත්ති එතුමා නියමෙ අර්ථය දක්වන පරිදි පැහැදිලි කරන ලදී. මෙම ප්‍රතිපත්ති නිවැරදි ස්වරූප යෙන් ම අවබෝධ කරගත් ශ්‍රී ලංකාවේ ප්‍රථම හා අසහාය නායකයා මෙතුමාණන් වූ අතර, එම ප්‍රතිපත්ති අවංකව හා නිර්භීතව ක්‍රියාවට නැගීමට එතුමා උත්සාහ දැරීය. 1956 දී සිය මැතිවරණ ජයග්‍රහණයට අනතුරුව පෙරදිග හා අපරදිග රටවල් සමග ඔවුන්ගේ දේශපාලන මතවාදයන් නොසලකමින් සුහද තානාපති සම්බන්ධකම් පිහිටුවා ගැනීම මගින් මෙරට විදේශ ප්‍රතිපත්තිය එතුමා

විසින් වෙනස් කරන ලද්දේ මෙම ප්‍රතිපත්ති මත පිහිටා ගෙනය. අප දෙරට අතර මිත්‍ර සම්බන්ධතා තර කර ගැනීම පිණිස එතුමා විසින් මහජන චීන රජය සමග තානාපති සම්බන්ධතාවයන් ඇති කරන ලදී. මීට පළමු යුගයන්හි නායකයන්ට මෙන් මහජන චීන රජය මෙතුමාට හාල් හෝ රබර් හුවමාරු කර ගන්නා වෙළඳ හවුල් කරුවෙකු නොවීය. එතුමාට, මහජන චීන ජන රජය ජාතීන්ගේ හවුලේ අවශ්‍යම හවුල්කරුවෙකු විය. මානව වර්ගයාගේ ප්‍රගතියෙහි මහජන චීන ජනරජය උසුලන ස්ථානය එතුමාගේ චින්තාවන්හි සැමවිටම මුල්තැන ගෙන තිබුණි. වෙනස් වූ ආර්ථික ක්‍රමයක් නිසා කිසිම ජාතියක් තහනම් කර අත්හැර දැමිය නොහැකි බවත් කොමියුනිස්ට් වාදය එකල බියකරු බිල්ලෙකු නොව හුදෙක් වෙනස්වන යුගයක ලක්ෂණයක් පමණ බවත් 1957 නවදිල්ලියේ ජාත්‍යන්තර කටයුතු පිළිබඳ ඉන්දියානු මණ්ඩලය අමතා කළ දේශණයේ දී එතුමා පැවසීය. එතුමා විසින් 1956 නොවැම්බර් මස 22 වැනි දින එක්සත් ජාතීන්ගේ මහා සභාව අමතා පැවැත්වූ දේශණයේදී, සාමය, මිත්‍රත්වය සහයෝගිත්වය ළඟාකර ගැනීම සඳහා මිනිසා දරණ ප්‍රයත්නයේ අපරාජිත ගණයේ ප්‍රකාශණයක් වශයෙන් එක්සත් ජාතීන්ගේ සංවිධානය පිළිබඳව සිය විශ්වාසය තහවුරු කළ අතරම, මෙම සංවිධානයෙහි ලෝකයේ ජාතීන් වඩා හොඳින් නියෝජනය වනු ඇතැයි යන එතුමාගේ උද්‍යෝගිමත් අපේක්ෂාව ද පළ කළේය. 1957 දී එක්සත් ජාතීන්ගේ සංවිධානයේ ලංකා ශාඛාව අමතමින්, ලෝකයේ ජනගහණයෙන් පහෙන් එකක් නියෝජනය කරන මහජන චීන රජය එක්සත් ජාතීන්ගේ සංවිධානයෙන් බැහැර කර තිබීම ඉතාම නොවැදගත් හේතූන් මත විනා, කවර ආකාරයක යුක්ති සහගත වූ හෝ සාධාරණ හේතුවක් මත සිදුවූවක්දැයි තමාට තේරුම් ගත නොහැකි බව එතුමා පැවසීය. 1958 දී ලංකා වෙළඳ මණ්ඩලය අමතමින් මහජන චීන ජන රජයේ සහභාගිත්වය නොමැතිව ආසියාව සහ ඈත පෙරදිග පිළිබඳ ආර්ථික කොමිසම වැනි සංවිධාන විසින් ආසියානු ප්‍රදේශයේ ආර්ථික ප්‍රශ්ණ ගැන කටයුතු කරන්නේ කෙසේදැයි

තමාට තේරුම් ගත නොහැකි යයි එතුමා විසින් පවසන ලදී. සාමය යනුවෙන් අදහස් කරනුයේ අන්‍යොන්‍ය අවබෝධය බව තවත් අවස්ථාවකදී එතුමා විසින් සඳහන් කරන ලදී. 1958 දී කොළඹ පැවති ආසියා අප්‍රිකානු කාන්තා සම්මේලනය අමතා කළ දේශණයේදී රටවලට සෑම විටකදීම ඔවුනොවුන් සමග එකඟ නොවිය හැකි නමුත්, ඔවුනොවුන් අවබෝධ කර ගැනීමටත්, ඔවුනොවුන්ගේ විවිධ අදහස් අගය කිරීමටත්, යමෙකුගේ යම්කිසි විශේෂ දුෂ්කරතාවයන් හා මෙම දුෂ්කරතාවයන් පැන නැගිමට තුඩුදුන් තත්ත්වයන්ද අවබෝධ කර ගැනීමටත් එමගින් සාමය ආරක්ෂා කර ගැනීම හා තියුණු ගැටුම් ඇතිවීම වැළැක්වීමට අත්‍යාවශ්‍ය වන බවත් එතුමා පැවසීය.

මෙවැනි අදහස් අනුගමනය කිරීමට අපොහොසත් වූ රටවල්වල ක්‍රියාවන් කෙතරම් අර්ථශූන්‍ය නාස්තිකර ක්‍රියාවන්දැයි ඉතිහාසය විසින් පසුව ඔප්පු කර තිබේ. 1957දී ශ්‍රී ලංකා විශ්ව විද්‍යාලයේ උපාධි ප්‍රදනෝත්සව යේ දී කළ දේශණයේ එතුමා විසින් මෙසේ පවසන ලදී. "ඉතිහාසයේ මින් පෙර නොවූ විරූ අන්දමින් මිනිසාගේ අභිමානය හා සහෝදරත්වය, අපගේ ආගම්, වර්ණ, ගෝත්‍ර හෝ දෘෂ්ඨි කුමක් හෝ වේවා අප සියල්ලම එක්වන් යැයි යන කරුණක් අප විසින් පිළිගත යුතුව ඇති බව මට හැඟී යයි. අප එකිනෙකා කෙරෙහි අප තුළ පවත්නා ගෝත්‍රික, දෘෂ්ඨිමය, භාෂාමය, ආර්ථික, සමාජයීය හෝ වෙනත් අංශයන් පිළිබඳව නුරුස්නා ගතිය අපට එකට ජීවත්විය නොහැකි යයි අපට හැඟීයන තත්ත්වයට දියුණු වීමට ඉඩ දිය නොහැක".

දිවංගත අගමැතිතුමාගේ ශ්‍රී නාමය සමරණු වස් ජාත්‍යන්තර සම්මන්ත්‍රණ ශාලාවක් ඉදි කිරීමට වඩා යෝග්‍ය උපහාරයක් සිතා ගත නොහැක. මහජන චීන ජන රජය විසින් ත්‍යාග කරන ලද මෙම ශාලාව වූ කලී සහයෝගිත්වය, සාමය හා ජාතින් අතර මිත්‍රත්වය දිනා ගැනීමෙහි ලා බණ්ඩාරනායක මැතිතුමා තුළ වූ පරමාර්ථ යන් කෙරෙහි චීන ජන රජය හා එම ජනතාව දැක්වූ උසස් ගෞරවයට සදතන සාක්ෂියකි.

මෙම ශාලාව ගොඩනැගීම වනාහි, සාමකාමී සුහද වාතාවරණයකදී අන්තර් ජාතික සාකච්ඡාවන් පැවැත්වීමට සුදුසු මධ්‍යස්ථානයක් ලෙස ඉදිරිපත් වීමෙන් ජාත්‍යන්තර සහයෝගිතාවය සහ මිත්‍රත්වය දියුණු කිරීමේ ක්‍රියාවලියේදී උපකාරී වීමට හැකියාවක් ශ්‍රී ලංකාවට ලබා දෙන්නේය.

සම්මන්ත්‍රණ ශාලාවෙහි 1,500 දෙනෙකුට ඉඩකඩ සැපයෙන අතර, නියෝජිතයින් 540 දෙනෙකු සහිත නියෝජිත කණ්ඩායම් 90 ක්, නිරීක්ෂකයින් 110 ක්, ප්‍රවෘත්ති වාර්තාකරුවන් 85 ක් සඳහාත් හා ඉතිරි කොටස මහජනතාව සඳහාත් වෙන් වී ඇත. කුරුපා සහිත වහලය දරා සිටින ඉදිකටු වැනි සිහින් වූ කුළුණු මෙන්ම ඇතුල් බිත්ති, ප්‍රධාන ප්‍රවේශ කොටසේ ගෙබිමත් චීනයේ ඊසාන දිග ප්‍රදේශයෙන් හා ෂැන්ටුං ප්‍රදේශයෙන් ගෙන්වන ලද දීප්තිමත්, සුදෝ සුදු, බැසයන සූර්ය වර්ණ හා රක්ත වර්ණයන්ගෙන් යුක්ත වූ කිරිගරුඬ ගල් අල්ලා ඇත. මහජන චීන ජන රජයේ හා ශ්‍රී ලංකාවේ කම්කරුවන්, ඉංජිනේරු හා කාර්මික සේවකයින් 1,350ක් පමණ දෙනෙකු සේවයේ යොදා ගනිමින් 1970 නොවැම්බර් මාසයේ දී මෙහි ඉදිකිරීම් වැඩ අරඹන ලදී. දිවංගත බණ්ඩාරනායක මැතිතුමාගේ ශරීර ප්‍රමාණයේ උඩුකය ප්‍රතිමාවක් ප්‍රධාන ශාලාවේ තබා ඇති අතර, ශ්‍රී ලංකාවේ බටහිර වෙරලේ සිට බලන විට ශ්‍රී පාදයට හා කඳුරටට උඩින් දිස්වන හිරු උදව සහිත හාත්පසින් පෙනෙන දර්ශණයක තෙල් සායමින් නිම කරන ලද බිතු සිතුවමකින් එහි පසුතලය සකස් වී ඇත.

ඉන්දියානු සාගරය සාම කලාපයක් වශයෙන් ප්‍රකාශ කරන සේ ශ්‍රී ලංකාව විසින් ඉල්ලා සිටිනු ලබන මෙවන් කාලයකදී මෙම ජාත්‍යන්තර ශාලාව පිහිටුවීම විශේෂ වැදගත්කමකින් යුක්ත වේ.

මහජන චීන ජන රජය හා ශ්‍රී ලංකාව යන දෙරට විසින්ම දෙවැනි ලෝක සංග්‍රාමය අවසන් වූ වහාම, යටත් විජිත ආධිපත්‍යයෙන් මිදී ස්වාධීනත්වය දිනා ගැනීම සඳහා අත්තිවාරම දමන ලදී. එවක් පටන්, මහජන

චීන ජන රජය විසින් සිය පරිවර්තනය කිරීමේදී ලබා ගන්නා ලද ජයග්‍රහණයන් අනෙකුත් සංවර්ධනය වෙමින් පවත්නා ජාතීන්ට ආශ්වාදයක් වේ. ශ්‍රී ලංකාව හා මහජන චීන ජන රජය අතර මිත්‍රත්වය පදනම් වී ඇත්තේ සියළුම ජාතීන් අතර සාමය හා ප්‍රගතිය උදෙසා ඇති අභිලාෂය මතය.

සාමකාමී මානව සම්බන්ධතාවයන්හි ප්‍රගතියේ නව සැතැපුම් කණුවක් වන බණ්ඩාරනායක අනුස්මරණ ජාත්‍යන්තර ශාලාව පිහිටුවීම සමරනු වස්, මුද්දරයක් නිකුත් කිරීමට ලැබීම තැපැල් හා විදුලි සංදේශ අමාත්‍යාංශයේ භාග්‍යයට කරුණකි.

අෂ්ට කෝන හැඩයෙන් යුත් උස්ව නැගුණු පාරිශුඩ ශෝභාවෙන් සෑම දෙසකටම එක සමාන අයුරින් දිස්වන ජාත්‍යන්තර සම්මන්ත්‍රණ ශාලාව වූ කලී දිවංගත ඇස්. ඩබ්ලිව්. ආර්. ඩී. බණ්ඩාරනායක මැතිතුමාගේ චින්තනය හා අධ්‍යාත්මික ගුණය පිළිබඳ විශ්ව සාධාරනත්වයේ සංකේතයක් වන අතර, මෑත අතීතයේ දී ශ්‍රී ලංකාවේ බිහි වූ අසහාය මානව හිතවාදී ශ්‍රේෂ්ඨයාණන් උදෙසා වූ ඉතා යෝග්‍ය උපහාරය ද වන්නේ ය.

## ශිල්පීය විස්තර

| | |
|---|---|
| වර්ගය | ... ශත 15 |
| මෝස්තරකරු | ... ආර්. බී. මාවිල්මඩ |
| වර්ණ | ... හෙලනිල් සහ තදනීල |
| හැඩය | ... තිරස් |
| නිකුත් කරන දිනය | ... 1973 මැයි 17 |
| ප්‍රමාණය | ... මි. මී. 45 × 32 |
| මුද්‍රණය | ... එක්සත් රාජධානියේ සීමාසහිත තෝමස් ඩිලා රූ සහ සමාගම |
| පත්‍රිකා සැකැස්ම | ... එක් පත්‍රිකාවකට මුද්දර 100 බැගිනි |
| මුද්‍රණ ක්‍රමය | ... ඩිලක්‍රිල් |

## මුල් දින කවර සේවාව

නිල මුල් දින කවර එකක් ශත 25 බැගින් විකිණීමට තැබෙනු ඇත.

## විකිණීමේ කොන්දේසි

අලුත් මුද්දර සහ මුල් දින කවර සැපයීම සඳහා වන ඇණවුම් සම්පූර්ණ විස්තර සහිතව අධ්‍යක්ෂ, මුද්දර කාර්යාංශය, 4 වැනි මාලය, සෙලින්කෝ මන්දිරය, කොළඹ 1, වෙත ලිපිනය කළ යුතු අතර, මුද්දර කාර්යාංශයේ අධ්‍යක්ෂ වෙත ගෙවිය යුතු වන සේ මුදල් ඇණවුමක් හෝ තැපැල් ඇණවුමක් හෝ චෙක්පතක් හෝ ඒ සමඟ එවිය යුතුය.

முத்திரைச் செய்தித்தாள் இல. 37

அஞ்சல் தொலைத் தொடர்பு அமைச்சு,

1973 மே 12

பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சருவதேச மாநாட்டு மண்டபம் திறக்கப்படும் வைபவத்தை கொண்டாடு முகமாக இலங்கை அஞ்சல் தொலைத் தொடர்பு அமைச்சு ஓர் முத்திரையை 1973 மே 17 ஆந் திகதியன்று வெளியிடும். காண்பவர்களது கண்களை ஈர்க்கும் காட்சிகளைத் தழுவும் இம்மண்டபம் தென்கிழக்காசியாவிலேயே மிகச் சிறந்ததாக விளங்குகின்றது. காலஞ்சென்ற திரு. எஸ். டபிள்யூ. ஆர். டீ. பண்டாரநாயக்காவை நினைவு கூரும் வகையில், மக்கள் சீனக்குடியரசினால், அன்னாருக்கு நன்கொடையாக அளிக்கப்படும் நினைவுச் சின்னமே இம்மண்டபமாகும். இவர் எத்தகைய இலட்சியங்களுக்காக வாழ்ந்து உயிர் நீத்தாரோ அத்தகைய இலட்சியங்களை இம்மண்டபம் பிரதிபலிக்கின்றது. மனிதர்களுக்கிடையே எவ்வித வேறுபாடுகள் அவ்வப்போது தோன்றினாலும் அவர்கள் ஒற்றுமையாக ஒன்று சேர்ந்து வாழவேண்டுமென்ற கோட்பாட்டை அவர் மேலாக மதித்து அதனைத் தமது சகல செயல்களிலும் காட்டியுள்ளார். மக்களிடையே கருத்துவேறுபாடும், மற்றும் அவரவர் இலட்சியங்களுக்கிடையே வேற்றுமை எழுந்தாலும், அவர்களுக்கிடையிலான நட்புறவைப் பாதுகாப்பதும், ஒவ்வொருவரையும் நன்கு புரிந்து அவரவர்க்கு மதிப்பளிப்பதும் மிகவும் அவசியமாகும். (1957 இல் ஐக்கிய நாட்டுத் தாபனத்தின் இலங்கைக் கிளைக்கு நிகழ்த்திய உரை)

1954 ம் ஆண்டு இந்தோனேசியாவிலுள்ள பாண்டுங் நகரில் நடைபெற்ற மாநாட்டில் முறைப்படுத்தப்பட்ட கூட்டுவாழ்வின கோட்பாடுகளை இவர் அதனது உள்ளார்ந்த நிலையில நன்கு விளக்கிக் காட்டியுள்ளார். இத்தகைய கோட்பாடுகளின் உள்ளார்ந்த கருத்தையும், நோக்கத்தையும் நன்கு புரிந்து கொண்ட இவர் இலங்கையில் முதன்மையானவராகவும், தலைச்சிறந்தவராகவும் விளங்கினார். இதனை நேர்மையாகவும் துணிவாகவும் செயற்படுத்துவதற்கு இவர் மனமார முயற்சித்தார். 1956 ல் இவரும் இவரது கட்சியினரும் பாராளுமன்றத் தேர்தலில் அமோக

வெற்றியீட்டிய பின்னர், இக்கோட்பாடுகளுக்கமைய இவர் சுதந்திர இலங்கையின் அந்நிய நாட்டுக் கொள்கையில் பெரிதும் மாற்றம் செய்துள்ளார். இதன் மூலம் அரசியற் கோட்பாடுகளைப் பொருட்படுத்தாது கிழக்கத்திய, மேற்கத்திய நாடுகளுடன் நட்புரிமையுடைய தூதாண்மையுறவுகளை ஏற்படுத்தினர். மக்கள் சீனக் குடியரசிற்கும் இலங்கைக்குமிடையிலான நட்பை மேன் மேலும் பலப்படுத்து முகமாக மக்கள் சீனக் குடியரசுடன் தூதாண்மையுறவை இவர் ஏற்படுத்தினர். இறப்பர் அரிசிப் பண்டமாற்றுக்காக மட்டுமல்லாது, உலக நாடுகளுள் மக்கள் சீனக் குடியரசு இவரது கொள்கைகளை நன்கு மதித்து இவருக்கு பக்கபலமாக அமைந்து உதவியது. மனித சமுதாயத்தின் முன்னேற்றத்தில் மக்கள் சீனக் குடியரசு பெரும் பங்கை பெறுகின்றதென்பது இவரது எண்ணங்களில் முதன்மைவாய்ந்ததாகும். வேறுபாடான பொருளாதாரக் கொள்கையைக் கொண்டிருந்தாலும் அவர் எந்த நாட்டையும் ஒதுக்கி வைக்கவில்லை. பொதுவுடைமை அவருக்கு பயங்கரமான பூச்சாண்டியாகத் தென்படவில்லை. ஆனல் மாறுபட்டு வரும் சகாப்தத்தின் அறிகுறியாகவே இவருக்குத் தென்பட்டது (1957 ல் புதுடில்லியில் நடைபெற்ற உலக அலுவல்களின் இந்திய மன்றத்தில் நிகழ்த்திய உரை). 1956 நவம்பர் 22 ம் திகதி ஐக்கிய நாட்டுப் பொதுச் சபையில் இவர் உரையாற்றிய போது கூறியதாவது சமாதானம், நட்புரிமை, உடனுழைப்பு ஆகியனவற்றை எய்துவதற்கு மனிதனைப் பணியவைக்க இயலாத நிலையை எடுத்துக்காட்டும் இத்தாபனத்தில் தான் கொண்ட விசுவாசத்தை வலியுறுத்திய அதே வேளையில் உலக நாடுகளனைத்தும் அதிகளவில் ஐக்கிய நாட்டுத் தாபனத்தில் அங்கம் வகிக்க வேண்டுமென்ற கொள்கையை அவர் தீவிரமாகக் கொண்டிருந்தார். 1957 இல் ஐக்கிய நாட்டுத் தாபனத்தின் இலங்கைக் கிளையின் சார்பில் அவர் உரை நிகழ்த்தியபோது, மிக அற்பமான காரணங்களைத் தவிர்த்து உலக சனத்தொகையில் ஐந்தில் ஒரு பங்கைச் சனத்தொகையாகக் கொண்ட மக்கள் சீனக் குடியரசு நீதி, நியாய அடிப்படையில் ஐக்கிய நாட்டுத் தாபனத்தில் அங்கம் வகிக்க முடியாத நிலையை உணரும்போது தமக்கு இன்னமும் அதன் காரணம் புரியவில்லையெனக் கூறினர். 1958 இல் இலங்கை வர்த்தக மன்றத்தில் உரையாற்றும்போது, மக்கள் சீனக் குடியரசு பங்குபற்ருமல் எங்ஙனம் தூரகிழக்குப் பொருளியல் ஆணைக் குழு போன்ற தாபனங்கள் ஆசியப் பிரதேசத்தின் பொருளாதாரப் பிரச்சினைகளை அணுகுகின்றதென்பது தமக்கு விளங்கிக்கொள்ள

முடியவில்லையெனக் கூறினர். பிறிதொரு சந்தர்ப்பத்தில் அவர் கூறியதாவது சமாதானமென்பது இருவயினொத்த உடன்பாடே யாகும். நாடுகள் தத்தம் கொள்கைகளில் ஒன்றுக்கொன்றுடன் ஒத்திசைவாக இருக்கமாட்டா. ஆனால் ஒவ்வொவ்வொரு நாட்டின் நிலைகளை நன்கு புரிந்துகொள்வதும், அந்தந்த நாட்டின் நோக்கு நிலையை மதிப்பதும், ஒவ்வொரு நாட்டின் இக்கட்டான நிலையை நன்கு உணர்ந்து கொள்வதும், மிகவும் அவசியமாகும். இத்தகைய இக்கட்டான நிலை எக்கட்டத்தில் தோன்றிய தென்பதை யறிந்து அதன் விளைவாக நட்புறவுகளையும், ஒத்துழைப்பையும், உடனுழைப்பையும் ஏற்படுத்துவதன் மூலம் சமாதானத்தைப் பாதுகாக்கவும், கடும் சச்சரவுகளை விலக்கவும் முடிகின்றது. (1958 இல் நடைபெற்ற ஆபிரிக்க ஆசிய மாதர் மாநாட்டில் நிகழ்த்திய உரை)

1957 இல் இலங்கைப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் உரை நிகழ்த்தும்போது அவர் கூறியதாவது " வரலாற்றில் முன் பில்லாத வகையில், மனிதனின் சகோதரத்துவத்தையும், கௌரவத்தையும் மதிப்பதும், இன, மத, நிற அல்லது இலட்சிய வேறுபாடின்றி நாம் அனைவரும் ஒருவரென எண்ணுவதே மிகச் சிறந்ததென நான் கருதுகின்றேன். நாம் ஒற்றுமையாக ஒன்று சேர்ந்து வாழ்வதற்கு முடியாத நிலையை அடைவதற்கு ஏதுவான இன, இலட்சிய, மொழி, பொருளாதார, சமூக அல்லது பிற வெறுப்புணர்ச்சிகளை நாம் எம்மிடையேயிருந்து அகற்றுதல் வேண்டும் ". சிறந்த இலட்சியங்களுக்கமைய ஒழுகாத நாடுகள் மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவும் ஊதாரித்தனமாகவும், பயனற்றதாகவும் விளங்கினதென பின்வரும் வரலாறு சான்று பகர்ந்துள்ளது.

இத்தகைய நற்பண்புகளைப் பெற்ற காலஞ்சென்ற பிரதம அமைச்சரை நினைவு கூரும் வகையில் சருவதேச மாநாட்டு மண்டபமொன்றை அமைப்பதைத் தவிர வேறு தகுதிவாய்ந்த நினைவுச் சின்னம் என்ன இருக்கிறதென்ற உணர்வு எழ இடமில்லை. உலகநாடுகளுக்கிடையில் சமாதானம், நட்புறவு, உடனுழைப்பு ஆகியனவற்றை பலப்படுத்துவதற்கு திரு. பண்டார நாயக்கா கொண்டுள்ள இலட்சியங்களை சீன அரசாங்கமும், சீன மக்களும் பெரிதும் மதித்தும் போற்றினரென்பதை மக்கள் சீனக் குடியரசினால் நன்கொடையாக அளிக்கப்பட்ட இம்மண்டபம் நிரந்தர சான்று பகரும். சர்வதேச மாநாடுகள் இலங்கையில் நடைபெறுவதற்கு இம்மண்டப அமைப்பு உதவுவதுடன், சமாதானம் நட்புறவுச் சூழ்நிலைகளில் நாடுகளுக்கிடையிலான ஒத்துழைப்பையும் நல்லெண்ணத்தையும் மேம்படுத்துவதற்கும் இம் மண்டபம் பெரிதும் உதவுகின்றது.

இம்மாநாட்டு மண்டபம் ஏறத்தாழ 1500 பேர்களுக்கு இடவசதி யளிக்கும். 90 பேராளர் குழுக்களில் அடங்கும் 540 பேராளர்கள், 110 அவதானிப்பாளர்கள், 85 பத்திரிகையாளர்கள் ஆகியோரையும் மிகுதியில் பொது மக்களையும் இம்மண்டபம் உள்ளடக்கும். கவை போன்ற கூரைகளைத் தாங்கும் நீண்ட ஊசி போன்ற தூண்கள், உட்சுவர்கள், பிரதான நுழைவாயிற் பரப்பிலுள்ள தரைகள் ஆகியன யாவும், சீனுவின் வடகிழக்குப் பகுதியிலும், சண்தங் மாகாணத்திலும் இருந்து பெறப்பட்ட அழகிய வெள்ளைப் பளிங்குக் கற்களினுலும், பனி போல் வெள்ளிய, செவ்வானிற மற்றும் சிவந்த நிறங்கள் கொண்ட பளிங்குக் கற்களினுலும் அழகுற வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. கட்டட அமைப்பு வேலைகள் 1970 நவம்பரில் ஆரம்பிக்கப்பட்டது. இக்கட்ட அமைப்பு வேலைகளில் 1350 சீன, இலங்கைத் தொழிலாளர்களும், பொறியியல் தொழில் நுட்ப வல்லுநர்களும் ஈடுபட்டுள்ளனர். வெள்ளிய பளிங்குக் கல்லினுல் அமைக்கப்பட்ட காலஞ் சென்ற திரு. பண்டார நாயக்காவின் உருவச்சிலை பிரதான நுழைவு மண்டபத்தை அழகுபடுத்தியவண்ணம் காட்சி யளிக்கின்றது. இதற்கெதிரே சிவனொளிபாதமலையில் சூரியன் உதயமாகும் வண்ணக்காட்சிகளை யும், இலங்கையின் மேற்குக் கரையோரப் பகுதிகளிலுள்ள மலை நாட்டுப் பிரதேசத்தின் பசுமையான கண்களைக் கவரும் காட்சி களையும் சித்தரிக்கும் சுவரோவியங்களையும் காணலாம்.

இந்து சமுத்திரப் பிரதேசத்தைச் சமாதானப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்துமாறு இலங்கை வேண்டுகோள் விடும் அதே வேளையில் இச்சருவதேச மாநாட்டு மண்டபம் அமைக்கப்படுவது குறிப்பிடத்தக்கதோர் நிகழ்ச்சியாகும்.

இரண்டாவது உலக மகாயுத்தம் முடிவடைந்ததும் குடியேற்ற நாட்டு ஆதிக்கத்திலிருந்து சுதந்திரம் அடைவதற்குக் கூட்டாக வித்திட்ட நாடுகள் இலங்கையும், மக்கள் சீனக் குடியரசுமேயா கும். இதன் பின்னர் மக்கள் சீனக் குடியரசு தனது முன்னேற் றத்தில் கொண்டுள்ள பெருமாற்றம் அபிவிருத்தியடைந்து வரும் பிற நாடுகளுக்கு வலுவையும், புத்துணர்ச்சியையும் அளிக் கின்றது. உலக நாடுகளுக்கிடையில் சமாதானத்தையும் அபி விருத்தியையும் ஏற்படுத்துவதன் அடிப்படையிலேயே இலங்கைக் கும் மக்கள் சீனக் குடியரசிற்குமிடையிலான நட்புறவு மேன் மேலும் வலுப்பெற்று வருகிறது.

பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சருவதேச மாநாட்டு மண்டபம் அமைக்கப்பட்டதை நினைவுகூரும் வகையில் அஞ்சல் தொலைத் தொடர்பு அமைச்சு முத்திரையொன்றை வெளியிடுவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றது. மனித உறவுகளைச் சமாதானமான முறையில் மேன்மேலும் பலப்படுத்துவதற்கு இந்நிகழ்ச்சி இன்னொரு விசேட அம்சமாகத் திகழ்கின்றது.

எண்கோண அமைப்பைக் கொண்ட இச்சருவதேச மாநாட்டு மண்டபத்தை எல்லாக் கோணங்களிலுமிருந்து உற்றுப் பார்க்கும் போது ஒரே மாதிரியாக ஓங்கியுயர்ந்த மண்டபமாகக் காட்சியளிக்கின்றது. காலஞ்சென்ற திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவின் பரந்த மனப்பான்மையையும், தத்துவத்தையும் பிரதிபலிக்கு முகமாக இம்மண்டபம் அமைகின்றது. இலங்கை வரலாற்றை உற்று நோக்குங்கால் இலங்கை ஈன்றெடுத்த தவப்புதல்வர்களுள் அதிக சிறப்புப் பெற்றவராகவும், மனித இன இயற் பண்பாய்வாளராகவும் திகழ்ந்த காலஞ்சென்ற திரு. பண்டாரநாயக்காவிற்கு அளிக்கப்படும் தகுந்த நினைவுச் சின்னமே இம்மாநாட்டு மண்டபமாகும்.

## தொழில்நுட்ப விபரங்கள்

| | | |
|---|---|---|
| இனப்பெறுமதி | .. | 15 சதம் |
| வடிவமைப்பாளர் | .. | ஆர். பி. மாவில்மட |
| நிறங்கள் | .. | இலேசான நீலம், நீலம் |
| அமைப்பு | .. | கிடைக்கோடு |
| வழங்கும் திகதி | .. | 17, மே 1973 |
| அளவு | .. | 45 × 32 மி. மீ. |
| அச்சாளர்கள் | .. | தொமஸ் டீ. லா. றூ அன்ட் கம்பனி லிமிடெட் ; ஐக்கிய இராச்சியம் |
| தாள் அமைப்பு | .. | ஒரு தாளில் 100 முத்திரைகள் |
| அச்சிடும் முறை | .. | டெலாகிறயில் |

## முதல் நாள் உறை சேவை

அலுவலக முதல் நாள் உறை விற்பனைக்குண்டு, ஒரு உறையின் விலை 25 சதம்.

## விற்பனை நிபந்தனைகள்

புதிய முத்திரைகள் முதல் நாள் உறைகள் பெறுவதற்கான ஆடர்களை முழு விபரங்களுடன், கொழும்பு 1, சிலிங்கோ ஹவுஸ் 4 வது மாடி, முத்திரைப் பணியக அதிபருக்கு அனுப்புதல் வேண்டும். முத்திரைப் பணியக அதிபரின் பெயரில் காசுக் கட்டளை அல்லது அஞ்சற் கட்டளை இணைத்து அனுப்புதல் வேண்டும்.